december
1989

# அஆஇ

AANAA AAWANNAA IENAA

எனது மயிர் பொசுங்கி விட்டது
எனது தோல் கருகிவிட்டது
எனது காதுச்சோணைகள் எரிந்துவிட்டன
இந்த ரணங்களோடுதான்
மீண்டும் எழுந்திருக்கிறேன்

இந்த ரணங்களின்
தழும்புகளுடன்தான் நான் இனி வாழவேண்டும்
எனது மனவெளியோ
வெந்த வனம்போல் உள்ளது.
தீப்பிடித்துக் கருகிய புற்கற்றைகள்
இங்கொன்று அங்கொன்றாய் தெரிகிறது
இடையே சாம்பல் கலந்தமண்
அடி கருகிய புற்கற்றைகளிலிருந்து
இரண்டொரு பசும் முளைகள்
சின்னச் சின்ன பச்சைப் படர்கள்
தெரிகிறதா ?

## அரசியல் ஆய்வு இலக்கிய காலாண்டு இதழ்

Tijdschrift voor Tamils in Nederland



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கதாரர்கள் தமது ஆக்கங்களுடன் தமது முகவரி முழுப்பெயர் போன்ற முழு விபரங்களையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். இவ் விபரங்கள் அற்ற ஆக்கமோ - விமர்சனமோ - ஆய்வுகளோ பிரசுரிக்கப்படமாட்டாது.

ஆக்கதாரர்களே அவர்களது ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

ஆக்கபூர்வமான, சஞ்சிகை பற்றிய விமர்சனங்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். அவையே எம்மை மேலும் உயர்த்தும் படிகளாகும்.


# அஆஇ

அரசியல் - ஆய்வு - இலக்கிய ஏடு

மார்கழி 1989 ஏடு 1

முகவரி.... AANAA AAWANNAA IENAA
Postbus 8523
8905 K M LEEUWARDEN
Nederland

சந்தா விபரம்
1 வருடம் (தபாற் செலவுடன்).... FL 10,-
நெதர்லாந்து தவிர்ந்த ஐரோப்பிய நாடுகள்
1 வருடம் FL 15,-

எமது வங்கி/க.இல... 12.75.43.171
Rabobank
3354 LEEUWARDEN


முன் அட்டையில்

*

சண்முகம் சிவலிங்கத்தின் மீண்டும் எழுந்திருக்கையில் என்ற கவிதையில் வரும் சில வரிகள்.


R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323


## — எம் கருத்து —

இது அரசியல் ஆய்வு இலக்கிய இதழின் முதல் ஏடு. எமது எண்ணம் உணர்வுகளின் ஆரம்பம். கையெழுத்து வடிவில் சஞ்சிகையாக உருப்பெற்றுள்ளது. நீண்ட காலத்தில் நெதர்லாந்தில் இருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளில் ஒன்றாக இது அமைந்துள்ளது.

ஒரு பத்திரிகையின் தேவையை உணர்ந்தே இதை நாம் ஆரம்பித்துள்ளோம். எம்மைப் பொறுத்தவரை எமக்கு பத்திரிகைத் துறையில் எவ்வித முன் அனுபவமும் இல்லை. இந்த அனுபவம் மட்டுமே அவசியம் என்பதுமில்லை. இப்பத்திரிகையினூடாக நாம் யாருக்கும் ஆசான்களாக இருந்து அறிவு புகட்டிடும் நோக்கமும் எமக்கில்லை. நாம் பல்வேறு அரசியல் தன்மைகள், முரண்பாடுகள் சிந்தனைகள் கொண்ட சமுகத்துள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பல்வேறு விதமான தாக்கங்கள் உணர்வுகள் எம்மையும் இச்சமுகச் சூழ்நிலையை உணரவும் மக்களைப் பழக்கவும் வாசிக்கவும் எழுதவும் தூண்டுகின்றன. அத்தூண்டுதலே இதன் ஆரம்பம்.

எமது சமூகப் பிரதிநிதிகள் ஐரோப்பிய தன்மைகளின் தாக்கத்தினால் ஒருபுறத்திலும் எமது தாய்நாட்டின் நெருக்கடிகளின் பின்னடைவுகளின் தாக்கத்தினால் மறுபுறத்திலும் வருந்தியும், நம்பிக்கையீனமும் கொண்டவர்களாக காணப்படுகிறார்கள். உணர்வுகளை மழுங்கடிக்கும் விதமான போராட்டத் தன்மைகள், கருத்துக்களுக்கு சுதந்திரமின்மை, ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அடக்குமுறையாளர்களுக்கும் துணைபோவது, வக்கிரமான தனிமனித போட்டிக் கொலைகள். அதிகாரத்திமிர், தேசிய வெறி, இனவெறி போன்ற பாகுபாட்டு வெறிகளைத் தூண்டுவது, அதில் சுயநலம் தேடுவது. இவையும் இவைபோன்ற பல்வேறு நிலைகளும் விரக்தியையும் போராட்டத்தில் நம்பிக்கையீனத்தையும் கொண்டுவந்து விட்டுள்ளது.

இவற்றிற்கு எமது சுயநலம் கொண்ட தலைமைகளும் அவர்களைப் பயன்படுத்திய அன்னிய சக்திகளும் காரணமாய் அமைந்து விட்டன. இவையே தொடருமானால் அநாகரிகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கொடிய கரங்களாக எமது குரல் வளையை நசுக்கும். பாசிசம் புதிய புதிய கொடுமைகளை அரங்கேற்றும். இவை தடுக்கப்பட வேண்டாமா? உண்மையில் எமக்கு விடுதல் கிடைக்கும் என்ற உணர்வுடன் உழைப்பையும் உயிரையும் கொடுத்த இளம் போராளிகளின் எண்ணங்கள் வீணாகிப் போய் விட வேண்டுமா? போராட்டம் மிக நீண்டது புதிய சமூகப்பார்வையுடன் தொடரப்பட வேண்டியது. அற்ப சலுகைகளும் சமரசத்திட்டங்களும் முடக்கங்களைதும் விடுதலையாகி விடாது. புதிய சமூகப்பார்வையும் அதன் கருத்துக்களும் பரப்பப்படவும் எம்மண்ணில் பதிக்கப்படவும் வேண்டும் என்பது எமது இலக்கு. இந்த இலக்கின் ஒரு சிறுபரப்பையாவது எம்மால் நிரப்பிவிட முடிந்தால் அதுவே எமது வெற்றியாகும்.

ஆரோக்கியமான அரசியல் இலக்கிய வழமைகள் விமர்சனங்கள் ஆய்வுகள் ஊடாக சரியானதும் தெளிவானதுமான பாதைக்குப் போகும் என்பது எமது எண்ணம்.

இப்போக்கை வளர்ப்பதற்கான பணிகளில் சுதந்திரமான கருத்துப் பரிமாற்றம் அவசியம். ஆய்வுகள் விமர்சனங்கள் என்பன அரசியல் இலக்கியப் பரப்பை மேலும் ஆழப்படுத்தவும் ஆரோக்கியப்படுத்தவும் பயன்படும் என்பதும் எமது எண்ணம். இந்த எண்ண உணர்வுகளோடே அ ஆ இ யை உங்களிடம் அறிமுகம் [?] செய்கிறோம்.

அ ஆ இ யின் தொடர்ச்சியான வளர்ச்சியும் வெளிக்கொணர்வும் உங்களது எழுத்துக்கள். விமர்சனங்கள் வாசிப்பு இவற்றுடன் ஆதரவு என்பவற்றிலும் தங்கியுள்ளது. பல சிரமங்களுக்கு மத்தியில் எமது கூட்டு முயற்சியில் இப்பிரதி வெளிவந்துள்ளது. மிகக்குறைந்த எண்ணிக்கைப் பிரதிகள் வெளிக்கொணர்ந்துள்ளதால் இதன் கருத்துக்கள் பலருக்கு கிடைக்காமலே போய்விடக்கூடும். இதன் கருத்துக்கள் சகலருக்கும் செல்ல வேண்டும் என்பது எமது நோக்கு. இந்நோக்கிற்கு நீங்களும் கைகொடுப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறோம். — ஆசிரியர்குழு





# திருமதி ரஜனி திராணகம அகால மரணமானார்

கடந்தகாலங்களில் நாம் வெட்கித்தலை குனியும் அளவிற்கு ஈழப்பரப்பில் பல்வேறு மனித உரிமைமீறல்கள் வெறியாட்டங்கள் நடந்துமுடிந்தன. மேலும் தொடர்கின்றன. அப்பாவிப்பொது மக்கள், விடுதலை விரும்பிகள், மாணவர்கள், கல்விமான்கள் பலர் கொல்லப்பட்டு விட்டார்கள் இக்கொலைகள் யாவும் எல்லா வழிகளிலும் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட எல்லா அமைப்புக்களும் வெளியார் சக்திகளும் இவற்றிற்கு எவ்வொரு நியாயங்களும், காரணங்களும் கற்பித்தாலும் இத்தனிமனிதக் கொலைகளால் சாதித்தது என்ன?

இதே பாரம்பரியங்களோடு இன்னுமோர் பெண்மணி கொல்லப்பட்டு விட்டாள். யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் (மருத்துவபீடம்) திருமதி ரஜனி திராணகம (MBBS, PhD) காத்திருந்து பின்தொடர்ந்த கொலைஞன் ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட்டாள். 21-9-89 மாலை 6 மணியளவில் மாணவர்களின் நேர்முகப் பரீட்சை ஒன்றை முடித்துக்கொண்டு வீடு திரும்பி வருகையில், இரண்டு குழந்தைகளின் தாயான இப்பெண்மணியின் இறுதி நமது தேசத்தின் புதிரைய நகைத்து விட்டது. இதுவரை நடந்த பல அழிப்புக்கள் போன்றே இதுவும் கேட்பாரற்று நடந்துமுடிந்தது. ஆனால் இவரைக் கொன்றவர்கள் யார்? கொல்வதற்கான காரணம் என்ன? இவை இன்றுவரை அறியப்படாததும், அறிவிக்கப்படாததுமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது.

ரஜினி அவர்கள் பல்கலைக் கழக மருத்துவபீட விரிவுரையாளராகப் பணியாற்றி பின் இலண்டனில் மேற்படிப்பைப் பெற்றிருந்தார். பலரும் ஐரோப்பிய நாடுகளில் தம் தேசங்களில் அக்கறை அற்றவர்களாக காலம் கடத்த, எம் தேச மக்களுக்காகவும், மாணவர்களுக்காகவும் நாடு திரும்பி யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றினார். பல்வேறு மனித உரிமை மீறல்களையும், [illegible] தியாக வரலாறுகளோ காட்டப்படாது கொல்லப்பட்ட பொது மக்கள் சார்பாகவும் மாணவர்கள் சார்பாகவும் நேர்மையான கருத்துக்களையும் செயற்பாடுகளையும் கொண்டிருந்தார். எம் சமூகத்தில் புரையோடிப் போய்க் கிடக்கும் பெண் அடிமைமுறைகளையும் - பெண்கள் விடுதலை பெற வேண்டிய அவசியத்தையும் அது சார்ந்த கருத்துக்களையும் கொண்ட எம் சமூகத்தில் அரிதாகவுள்ள பெண் பிரதிநிதிகளில் ஒருவராகக் காணப்பட்டார்.

நிகழ்காலத்தில் இந்திய மேலாதிக்கம், சிங்கள தமிழ் தேசியவாதம் என்பன நிராகரிக்கப்பட்டு ஒரு சித்தபூர்வமான, மக்கள் சார்ந்த மக்களுக்கான அரசியல் வளர்த்தெடுக்க வேண்டுமென்ற கருத்தியல் கொண்டவர்.

மாணவர்களில் அக்கறை கொண்ட ஆசிரியையாகவும், நல்லதொரு மருத்துவராகவும், பழகுவதற்கு இனிய நல்லதொரு தோழியாகவும், தவறுகளை சுட்டிக்காட்டுகின்ற நேர்மையான பெண்ணாகவும், அறிவும் ஆழ்ந்த மிக்க கருத்துக்கள் கொண்டவராயும் இருந்தார் என்பது அவரோடு பழகிய பலரது அபிப்பிராயமாகும்.

"என் நாட்டிற்காகவும், என் மக்களுக்காகவும் என்னால் முடிந்ததை எந்த இடத்திலும் செய்வேன்" என்ற தனது உணர்வினை உண்மையாக்கி தன் உயிரையே கொடுத்திருக்கிறார்.

இக் கொலையும் இவை போன்ற ஏனைய கொலைகளும் செய்தவர் மிக வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவர்களே. இப்பெண்ணின் சமூகப் பயன்பாடும் சேவையும் மிகப் பெரியது. இவரது இழப்பு நாட்டிற்கும், பல்கலைக்கழகத்திற்கும், முற்போக்கான கருத்துக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் பெரும் இழப்பாகும்.

ஒருவர். ஐரோப்பிய நாடுகளுக்கு வந்ததில் ஏதாவது பயன் உண்டா?
மற்றவர். ஏன் இல்லை? தமிழ்சினிமா நடிகர் நடிகைகளின் வாழ்க்கை, இதிகாசங்கள் நிறைய அறிந்து வைத்திருக்கிறேன்.
???





# கருத்து பரப்பு

## 1989ம் ஆண்டின் பிற்பகுதியில் எனது இலங்கை விஜயம் என் மனதில் பதிந்தவை

இக்கட்டுரை அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து அங்கு நிலைமைகளை அவதானித்த நெதர்லாந்துக்காரர் ஒருவரால் எழுதப்பட்டு, தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அவர் தனது பெயரைப் பிரசுரிக்க விரும்பவில்லை என்பதால் அவரது பெயர் குறிப்பிடப்படவில்லை.

இவரது கருத்துக்கள் பலதுடன் எமக்கு உடன்பாடுகள் இல்லையாயினும், சுதந்திரமான கருத்துப் பரிமாற்றம் அவசியமென்பதால் இக்கருத்துக்கள் பிரசுரிக்கப்படுகிறது. இக்கருத்துக்கள் பற்றிய விமர்சனங்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். கருத்து-பரப்பு எனும் பகுதி சுதந்திரமான கருத்துப் பரிமாற்றத்திற்காகவே ஆரம்பித்துள்ளோம்.

1989ன் பிற்பகுதியில் நான் இலங்கை விஜயம் ஒன்றை மேற்கொண்டு தென்னிலங்கை, மத்திய மலையகம், திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குச் சென்றிருந்தேன்.

திட்டமிட்டபடி எனது பிரயாணம் அமைந்ததாயினும் நிலைமை வழமையிலும் அதிக வேறுபட்டதாகவே காணப்பட்டது (verre van normaal). தென்னிலங்கையிலுள்ள அமைதியின்மைக்கு ஜே.வி.பியினர் காரணமாக இருந்ததுடன், இலங்கை இராணுவத்தால் ஜே.வி.பிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அளவிற்கதிகமான நடவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷக்களைகள் நூற்றுக் கணக்கான பொதுமக்களையும், ஜே.வி.பி உறுப்பினர்களையும் கொன்றொழித்துள்ளது.

நீதிமன்றங்களின் செயற்பாடுகள் முற்றாகவே இயங்கவில்லை. சில வழக்கறிஞர்கள் கொல்லப்பட்டு, அவர்களது சடலங்களை நீதிமன்றங்களுக்கூடாகப் பெற்றுக்கொள்ள வழக்கிடக்கூட முடியாத பய உணர்வு காணப்படுகிறது. சில வழக்கறிஞர்கள் நாட்டை விட்டு வெளியேறி விட்டனர். வேறு சிலர் தலைமறைவாகித் தொழிற்படுகின்றனர்.

இத்தகைய ஓர் ஒழுங்கற்ற சூழ்நிலையில் குறிப்பாக ஜே.வி.பியினது தலைமை உறுப்பினர்கள் கொல்லப்பட்ட பின்னர் இலங்கை இராணுவத்தினர் தமது அதிகாரம் கூடிவிட்டதாக எண்ணி மற்றெவருக்கும் எதையும் விட்டுக் கொடுக்காத நிலைமைகள் காணப்படுவதால் நம்பிக்கை தரக்கூடிய திட்டங்கள் உருவாவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் உள்ளது. மக்களுக்கு ஜே.வி.பியினரின் நடவடிக்கைகள் ஓரளவு ஸ்தம்பிதமடைந்துள்ளது என்ற நிம்மதி ஏற்பட்ட போதிலும் இதே துப்பாக்கிகளின் அதிகாரம், அரசுக்கெதிரான கிளர்ச்சியும் எந்த வடிவத்திலான எதிர்ப்பையும் சுலபமாக அடக்கப்படும் என்ற பயம் உள்ளது.

பெரும்பாலும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் வன்முறையோடு சம்பந்தப்படுகின்றனர். நிச்சயமற்ற சூழ்நிலையில் நாளாந்தம் மீண்டும், மீண்டும் பொதுமக்கள், நண்பர்கள், அயலவர் குடும்பத்தினர் கொல்லப்படுகின்றனர். பொதுமக்கள் போரை வெறுத்து சமாதானத்தையே நாடுகின்றனர்.

மக்களைப் பயமுறுத்தி தேர்தலில் துஷ்பிரயோகம் செய்து அதிகாரத்திற்கு வந்த தற்போதைய அரசாங்கத்தினால் எதுவித விமோசனமும் எதிர்காலத்தில் ஏற்படப் போவதில்லை என்றே பொதுமக்கள் கருதுகின்றனர். அரச அதிகாரத்தில் இருக்கும் யூ.என்.பி அரசிடம் வேறு எதுவித மாற்று வழியும் இல்லை. யூ.என்.பி அரசு தனக்கெதிரான எதிர்ப்பை பிளவுபடுத்த ஜே.வி.பியினரைப் பாவிப்பதில் வெற்றிகண்டுள்ளது.

யூ.என்.பியினது அழிப்பு பாதையிலான இந்நிலையினைப் பயன்படுத்தி தெற்கில் ஜே.வி.பியினரும், வடக்கில் புலிகளும் அரசியல் லாபம் தேட முயற்சிக்கின்றனர். 1977ம் ஆண்டுமுதல் சட்டபூர்வமான எதிர்ப்புக்கள் எல்லாவற்றையும் அடக்கியதோடு 1983ம் ஆண்டு தமிழர்களுக்கெதிரான இனக்கலவரத்தையும் தூண்டிய இதே யூ.என்.பியே தற்போது இந்தியாவை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்காக புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றது. இந்த இந்திய எதிர்ப்பு கோஷத்தின் மறைவில் ஜே.வி.பியினர் தாங்களும் சேர்ந்து முன்னேறலாம் என எண்ணினர். ஆயினும் ஜே.வி.பியினர் இராணுவத்தினரது குடும்பங்களை கொன்றதன் பின்னர் இராணுவத்தினர் ஜே.வி.பியினரின் வேலை நிறுத்தக் கோரிக்கைகளில் பங்குபற்றாததுமன்றி இவர்களுக்கெதிராகவும் குரலெழுப்பினர். ஜே.வி.பிக்கெதிரான அடக்குமுறை ஆயிரக்கணக்கானோரை கொன்று குவித்துள்ளது. கொழும்பு வட்டாரத் தகவலின்படி இதில் 60% மானோர் பெரும்பாலும் ஜே.வி.பியின் தீவிரஅங்கத்தவர் ஆவார்கள். ஏனையோர் பொதுமக்கள் ஆவர். போர் நிறுத்த ஒப்பந்தப்படி வடக்கிலும் கிழக்கிலும் இராணுவத்தினர் தங்களது முகாம்களிலேயே உள்ளனர். அதே வேளை புலிகள் இயக்கத்தினருக்கு திரும்பவும் ஆயுதபலத்தை கூட்டுவதற்கும், பயிற்சி பெறுவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. யாழ்ப்பாணத்தில் இந்திய இராணுவமுகாமின் வாசலில் கூட புலிகளின் முகாம் இருக்கிறது. ஈ.பி.ஆர்.எல்.எவ் இக்கட்டான நிலைமையில் உள்ளது. ஒருபுறம் இந்திய இராணுவம் இலங்கைத்தீவை விட்டுப் போவதும், மறுபுறம் கொழும்பு மத்திய அரசு வடக்குக் கிழக்கிலுள்ள மக்களை அரசாங்கத்தில் பங்கேற்பதற்கோ வழியில்லை என்று ஒதுக்கப்படுவதும் இவர்களுக்குப் பிரச்சனையாகவுள்ளது.

இலங்கை-இந்திய ஒப்பந்தப்படி இராணுவத்திலும் பொலிஸ்படையிலும் இருக்க வேண்டிய இனவிகிதாசாரம் உண்மையான இனவிகிதாசாரத்தைப் பிரதிபலிக்க வேண்டும். இதன் அர்த்தம் என்னவெனில் ஆயிரக்கணக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிசாரையும் ஆயிரம் இராணுவத்தினரையும் சேவையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். பொலிசாரின் நியமனம் மக்கள் தொண்டர் படையில் இருந்தே (civil voluntaryforce) செய்யப்பட வேண்டும் என்பதை கொழும்பு அரசும் ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழ் இராணுவத்தினரது நியமனம் வேறுவிதத்தில் அமைந்துள்ளது. இது பற்றி மத்திய அரசுடன் எதுவித ஒழுங்கும் செய்யப்படவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ் காரர்கள் தம் இஷ்டப்படி, பலவந்தமாக தமிழ் வாலிபர்களை ராணுவத்தில் சேர்க்கத் தொடங்கி விட்டனர். இவ்வாறு சேர்க்கப்பட்ட இந்த இராணுவத்திற்கும் பொலிஸ் படைக்கும் இந்திய அரசாலும் மாகாண அரசாலும் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. கொழும்பு அரசு இதனை மனக்குறையுடன் ஏற்றுக் கொண்டும், பார்த்துக் கொண்டும் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியும், சிங்களப் பிரதேசங்களில் பயிற்சி வழங்கி வருகின்றதும் கொடுத்துள்ளது. சங்கக் கூடின், கொழும்பு அரசும் ஈ.பி.ஆர்.எல்.எவ்(ப)-புலிகள் ஒருவரோடு ஒருவர் மோதி அழிந்து போவதை விரும்புகின்றது. இதன் பின்னர் யூஎன்பி அரசு தனது பயங்கரவாதத்தை வடக்குக்கிழக்கில் தொடரலாம்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் ஒரு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. அது இந்திய ராணுவம் மார்கழி மாதம் முடிவதற்குள் வெளியேறுவதை விரும்பவில்லை. அதேவேளை புலிகளும் பிரேமதாசாவும் அவர்கள் மார்கழி முடிவதற்குள் வெளியேற வேண்டுமென வற்புறுத்துகிறார்கள்.

1987ம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் ஒரு புதிய நிர்வாகம் வடக்குகிழக்கு மாகாண அரசு ஒன்றாக மாக திருகோணமலையில் அமைக்கப்பட்டது. இதில் திறமையுடன் வேலை செய்யத்தக்க ஊழியர்கள் வடக்கு கிழக்கிற்காக இழந்திருந்த சிவில் நிர்வாகத்தை திறம்படவும் புனரமைப்பதில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. இப்புனரமைப்பு வேலையில் புலிகளோ

தொடர்ச்சி 17ம் பக்கம்...



# உண்மைகள்

"நான் ஒரு தினக்கூலி
எனது குடும்பம் மிக வறியது
மனைவிக்கு இது பிரசவ காலம்
எனக்கு தீராத நெஞ்சு வலி"

இந்த உண்மைகள் வெளிவந்தன
இன்னோர் உண்மை ஒளிந்து கொண்டது

"இல்லை - நீ
எம்மோடு வேலை செய்
தப்பியோட வோ தலைமறைவாகவோ
எண்ணி ஏதும் செய்வாயானால்...."
எடுத்து நீட்டி துப்பாக்கி மிரட்டல்...

சொன்ன உண்மைகள் தொடர்ந்தன - ஆயினும்
இன்னோர் உண்மை ஒளிந்து கொண்டது

அன்னியக்கரங்களின் பொம்மைகளாகி
ஆயுதத்தை ஆட்சியுமாக்கி
ஆதாயத்துள் சோரம் போனவர் - தம்
தொ(கு)ண்டர் படைக்கு ஆள் சேர்க்கிறார்

இந்த துரோகத்துதிகளில் ஒன்றாய்....
எந்தன் கரங்கள் இணைவது எப்படி?
எம் சொந்தப் பலத்தில் தங்கி நின்று
தொடரும் சமூகக் கொடுமைகள் சிதைக்க
எந்தன் கரங்கள் என்றும் இணைப்பேன்
இதுவே இன்றைய உண்மையும் தேவையும்.

- குணம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கணங்கள்

— சி. இந்திரன் —

என்னைப் பொறுத்த வரையில் கவிதைகளை எழுதுவதைவிடச் சிந்திப்பது இலகுவாயிருக்கிறது. சிந்தனையில் ஒரு கணத்தில் உதித்த கவிதைகள் மனிதனை ஆட்டிப் படைக்கும் பல்வேறு தலையிடிச் சூழலில் எங்கோ உதிர்ந்து விடுகின்றன. உதிர்ந்தவை மீண்டும் சிலவேளைகளில் மலராகலாம். ஆனால் இவற்றை ஒன்று சேர்க்கும் சிரமத்தைத் தவிர்த்து மீண்டும் புதியவை நோக்கியே சிந்தனை நடை போடுகின்றது. இதனால் எழுதுங் கவிகளை விடச் சிந்திக்கும் கவிகளே ஏராளம். அவையும் தரமான கவிதைகள் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. கர்ப்பிணியாள் சுமந்தவாறு தன் கவிதை சுமக்கும் ஒருவரிடம் இருந்து கவிப்பிரசவத்திற்கும் அதன் கனிவு முதிர்ச்சிக்கும், வெளிப்பாட்டிற்கும் ஒரு காலமும் ஒரு சூழலும் வேண்டிக் கிடக்கிறது.

இக் "கணம்" கண்ட கவிகளே இன்று என்னுள் பிரகாசிப்பவர்கள். இவர்களை நான் துண்டுகளில், தூண்களில், சம்பாசனையில், சிறைகளில், தூக்குமேடையில், சிலவேளை மலகூடங்களில் கூடக் கண்டு விடுகின்றேன். இவர்கள் கவிஞர்கள் என்பதால் கவிதை எழுதவில்லை, கவிதை எழுதினார்கள் என்பதால் கவிஞர்களுமல்ல, அவர்கள் எழுதியதும் சிந்தித்ததும் என்னுள் நித்திய ரீங்காரமிட்டு என்னை முணுமுணுக்க வைப்பதால் இவர்கள் கவிகளாகவே என்னுள் இருக்கின்றனர்.

1886 ம் ஆண்டு சிக்காக்கோ நகரில் எட்டு மணித்தியால வேலை நேரப் போராட்டத்திலே மாபெரும் வேலைநிறுத்தத்தில் தொழிலாளர்கள் இறங்கினர். அதுவும் ஆயுத பாணிகளாக! இவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட மாபெரும் பொதுக் கூட்டமொன்றில் எங்கிருந்தோ ஒரு குண்டு வெடிக்கிறது. வெடித்த கணத்தில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அன்றும் தொழிலாளர் மடிந்தனர்.. நூற்றுக் கணக்கில்.. காயமடைந்தனர். அன்றைய தொழிலாளிகளின் இழப்புக்களும், மரணங்களும், ஐக்கிய அமெரிக்காவின் அதிகார நீதியின் அநியாய மரண தண்டனைகளும் மே தினத்தைப் போராட்ட நாளாக்கின. 1890 ம் ஆண்டில் இருந்து உலகம் மே தினத்தைக் கொண்டாடுகின்றது.

வேலைநிறுத்தத்தைத் தூண்டினார்கள் என்று தொழிலாளர்களைத் தூக்கிலிட்டது அன்றைய அதிகாரம். 1.11.1887 ல் தூக்கிலிடப் பட்ட தொழிலாளி ஆகஸ்ட் ஸ்பைஸ் அந்தக் கணத்தில் பின்வருமாறு கூறுகின்றான்.

(1) "இன்று நீர் நசிக்கும்
குரலிலும் பலமாய்
எங்கள் மௌனங்கள் ஆகும்
நாளொன்று தோன்றும்! "

உறுதியோடு கூறும் அவன் வரிகளுக்கு பாப்லோ நெருடாவை விழித்து இன்குலாப் பாடுகிறான்...

(2) " ஒடுக்கப் பட்ட குரல்கள் எல்லாம்
உன் குரல்வளை வழியாக
வெடித்துச் சிதறியதே! "

(3) " எங்கு வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் மரணம் நம்மைத் திடீரென்று தழுவட்டும், அதை நாம் வரவேற்போம். – அதனால் நமது போர்க்குரலை இன்னொருவர் செவிமடுப்பார் என்றால், நமது ஆயுதங்களை எடுத்துக் கொள்வதற்கு இன்னொருவர் கை நீட்டுவார் என்றால் நமது இறுதி ஊர்வலத்தில் சோக கீதத்தை இயந்திரத்துப்பாக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியின் ஓசையிலும், புதிய யுத்தம், புதிய வெற்றியின் ஓசையிலும் இசையமைத்துப் பாட மற்றவர்கள் முன்வருவார் என்றால்."

என்ற சே குவேரா வின் வரிகள் போல் மரணத்திலும் உறுதி குலையாத் தன்மையின் உள்ளொளியைக் காட்டுகின்றன ஆகஸ்ட் ஸ்பைசின் வார்த்தைகள்.

**************

வேற்று நாடொன்றில் தொழிற்சாலையொன்றில் மாடாய் உழைக்கிறான் என் நண்பன். ஒரு ஈழத்தவன். சிந்திக்க நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவன் சிந்தித்தே விடுகிறான். தொழிலாளி என்பவன் சிந்திக்கக் கூடாதென்பதற்பதற்காகவே அவனுக்கென்று இன்னோரன்ன பொழுது போக்குகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது இந்த அமைப்பு. வாழ்வுச் சிக்கலில் மூழ்கித் தவிக்கும் மனித பலவீன நரம்புகளையெல்லாம் பணமாக்கும் இந்த அமைப்பில் அவன் தன் வாழ்வு பற்றிச் சிந்திக்கின்றான். அவன் சிந்தனையே மறு கணத்தில் கவிதையாய் உருமாற்றம் பெறுகிறது.

(4) "வாழ்வு" நிறைவேறு
இலட்சியக் கனவுகளோடு
தொடர்பற்ற நிஜ உலகின்
சமரசமா ? – அன்றி
அது மிதிக்கும் வேதனையில்
தோன்றும் பெரு மூச்சா ?
இன்று விட்டு நாளை மாறுமென்று
ஆசைக் கோட்டைகளைக்
கட்டியதால் இக்கரைக்குப்
பச்சை நிறம் அக்கரையாம்



இடமும் காலமும்
மாற்றம் தருந்தான்
இந்த யதார்த்தமறியா
முட்டாளும் நானல்ல
ஆனாலும்
சிறியதோர் அதிகார வர்க்கமொன்று
தன் சுயத்திற்கு மட்டுமென
எனது இயற்கையையும்
என் மனித குலத்தினையும்
ஆட்சிக்குள் வைத்திருக்கும்
அந்த உண்மை இந்தப் பச்சைக்குள்
மழுங்கி விடக் கூடாது.

தன்னுணர்வும், தன்னறிவு விழிப்பும் பெற்ற மனிதன் ஆயிரமாயிரம் சமரசங்களோடு தான் இந்த உலகில் நடமாட முடிகிறது, இந்த நரக வேதனையிலும் உண்மையைத் தேடித் திரிகிறது இவன் கவிதை.

(5) ஈரானைச் சேர்ந்த பஃமான் நிறுமான்ட் எழுதுகிறான் – எங்கள் நிலவளத்தை அபகரித்து விடலாம், மலிவாகக் கிடைக்கின்ற கூலிகளைப் பெற்றுக் கொழுத்து விடலாம். ஆனால் அந்த வானத்தை, அப்பரந்த நீல வானத்தை செஞ்சூட்டுச் சூரியனை, மின்னுகின்ற பல கோடி வெள்ளிகளை இவர்கள் திருடி விடமுடியாது!"

(தொடரட்டும்)

கலையாக மாறாமல் சுவராக மாறாமல்
தளமாகித் தடித்த நிலமாக மாறாமல்
தெருவோரம் கிடந்த திடமான கற்களெல்லாம்
பாவம், திசை மாறிப் போயினவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சுவடுகள்

மகளே
நீ வெளியே போகாதே
படிக்காதே
தொழில் செய்யாதே என்று
நான் உன்னைக் கண்டிக்கமாட்டேன்

எப்போதும் உனக்கு
நான் காவலாக இருக்கமாட்டேன்
ஏன் தெரியுமா?
நான் அப்படியிருந்தால்
நீ எப்போதும் சிந்திக்கமாட்டாய்
என்னிடம்தான் எதிர்பார்ப்பாய்
கேட்பாய்

நீ
இந்த பரந்த விரிந்த
உலகத்தில் யாவற்றைப்பற்றியும்
நன்றாக அறிந்துகொள்
அதற்கேற்ப நீ நடந்துகொள்
எதற்கும் எவருக்கும்
பயம் கொள்ளாதே.

நீ,
அடக்கப்பட்டவள்
ஒருக்கப்பட்டவள் என்று
பெரிதாக சத்தம்போட்டு
அநுதாபப்படுபவர்களை
ஊமமாக நோக்கு:
அவர்களிடம் எதையும் எதிர்பார்க்காதே.

அதோ
வேலிக்கு வெளியே
என்ன நடக்கிறது என்று
பிய்ந்துபோன கிடுகுவழியே
வெளியே பார்க்கும்
அவர்களையும் உன்னைப்போல்
சிந்திக்கச் செய்.

இருளிற்குள் இருக்கும் அவர்களை
வெளிச்சத்திற்கு கூட்டிவா.
பாவம் அவர்கள்,
இருளையே பார்த்துப் பழகியதில்
வெளிச்சம்
அவர்கள் கண்களுக்கு கூச்சமாக இருக்கும்
பழகும்வரை
துணையாக இரு.

ஆம் மகளே
இதுவே
நான் நடந்துவந்த
பாதையில்
பாதங்களின் கீறலோடு
உனக்காக
அழுத்தி வைக்கும்
புதிய சுவடுகள்.

-கல்யாணி-

நன்றி: 'தூண்டில்'

10ம் பக்கத் தொடர்ச்சி.

அன்றிக் கொழும்பு அரசோ இந்தியாவுக்கும் எனக் கருதுமிடத்து அது திருப்திகரமானதாக இருக்கமுடியாது. என்னைப் பொறுத்தவரை இம்மாநில சுயாட்சி தமிழ்மக்களுக்கு கூடுதலான சுயாட்சிகளை கொடுப்பதற்கு முதற் படியாகும். அதற்கான ஆதரவை அதனோடு அரசியல் குழு நடத்துகின்றது என்று பாராது வழங்க வேண்டும்.

யாழ்ப்பாணத்திலும் அநேகமாக முழு இலங்கையிலும் அரசியலில் கருத்து வேற்றுமைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள இடமில்லையென்பது ரஜினி திராணகமவின் கொலையின் பின்னர் தெளிவாகத் தெரிகிறது. மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் யாழ்ப்பாணப் பகுதி தமது நடவடிக்கைகளைத் தொடர்ந்து செய்து வருகிறது. பிரசுரங்கள் மூலமும் விவாதங்கள் மூலமும் இவர்கள் இந்திய இராணுவத்தையும், வெவ்வேறு தமிழ் இயக்கங்களையும் விமர்சிக்கின்றனர். இவர்களது முயற்சிகள் மதிப்பையும் வரவேற்பையும் பெறுகின்றது. இலங்கைத்தீவத்தின் இராணுவமயமாக்குதலையும், மனிதாபிமானமற்றதுக் கொலைகளையும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்கு பேர்லினில்

# இலக்கியச் சந்திப்பு

காலம்: 22.12.89 தொடக்கம்
24.12.89 வரை

இடம்: MEHRINGHOF
GNEISENAU STR 2 A
1000 BERLIN 61

மேற்கு ஜேர்மனியில் வெளிவரும் தமிழ்ச்சஞ்சிகைகளின் ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள், வாசகர்கள் ஒன்றுகூடிச் சந்தித்து தம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், விமர்சனங்களை முன்வைக்கவும் என ஏற்படுத்தப்பட்ட ஒரு ஆக்கபூர்வமான முயற்சியே இலக்கியச் சந்திப்பாகும். இதுவரை ஐந்து சந்திப்புக்கள் நடந்து முடிந்துள்ளன. ஒவ்வொன்றும் புதுப்புது உணர்வுகளோடும், புதிய கருத்துக்களோடும் வளர்ந்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. கடந்த சந்திப்பு 'பிறங்போர்ட்' நகரத்தில் நடைபெற்றது. அதில் பல்வேறு ஆக்க இலக்கிய முயற்சிகள் - கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளது. இதன் ஆறாவது சந்திப்பு மேற்கு பேர்லினில் நடைபெறுகிறது. இச்சந்திப்பு மற்றைய சந்திப்புக்களிலிருந்து மேலும் முன்னேற்றகரமானதாகவுள்ளதை அவதானிக்க முடிகிறது. மேற்கு ஐரோப்பிய நாடுகள், ஸ்கண்டிநேவிய நாடுகளில் உள்ள தமிழ் இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள், சஞ்சிகை ஆசிரியர்கள், வாசகர்கள் இதில் அதிகமாகக் கலந்து கொள்வதுடன், பல விடயங்களையிட்டு ஆய்வுகளும், அறிக்கைகளும், கருத்துக்களும் சமர்ப்பிக்கிறார்கள்.

இச்சந்திப்பில் கலந்து கொள்ள விரும்புவோர் கீழ் வரும் முகவரியுடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

Tagung von Tamilen

Bildungswerk für Demokratie und Umweltschutz e.V.
Zeughofstr. 20, 1000 Berlin 36, Tel.: 612 60 74/5



# எமது தேடுதல்களும் எழுத்தாக்கமும்

வாசகர்கள் என்பது யார்? வாசிப்பதால் ஏதாவது பயன் உண்டா? படிப்படியாக வாசகர்கள் எப்படி எழுத்தாளர் ஆகிறார்கள். அவர்கள் எப்படி சமூகத்துக்கு பயன்படுகிறார்கள்? என்று எப்போதாவது சிந்தித்ததுண்டா? நான் இதன் மேல் என் பார்வையைச் செலுத்துவதும் சிந்திப்பதுமுண்டு. இதனாலேயே இச்சிறு குறிப்பை எழுத முனைந்தேன்.

அநேகமான வாசகர்கள் பல்வேறு சிறுகதைகள் நாவல்கள் கவிதைகள், கட்டுரைகள் இவை போன்ற இலக்கிய வடிவங்களை வாசிக்கிறார்கள். இவர்களில் தேடுதல் அடிப்படையில் வாசிப்பவர்களும் பொழுது போக்கில் கிடைப்பதை வாசிப்பவர்களும் என்று பலர் அடங்குவர். இதில் பலர் இலக்கியங்களின் பயன்பாடுகளைத் தெரிந்து கொண்டும் சமூகத்தில் சரியானதும், தவறானதும் கருத்துக்கள் பரப்பப்படுவதைக் கண்டு சரியானவற்றில் அழுத்தத்தை தேடி தமக்குள் ஓர் வளர்ச்சியை ஏற்படுத்தவும் தவறானவற்றை விலக்கி விடவும் முனைகிறார்கள்.

பல எழுத்துக்கள் கலை வடிவங்கள். அதனுள்ளே அமைந்த கருத்துக்கள் வாசகர்களாகிய எம்மிடத்தில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இத்தாக்கங்களினூடே தான் எமது அறிவாற்றல் என்பது கூர்மைப்படுத்தப்படுகிறது. அல்லது மழுங்கடிக்கப்படுகிறது. அத்தாக்கங்கள் பல்வேறு விதமாக எம்மீது பதிந்துள்ளது. இத்தாக்கங்களின் வெளிப்பாடுகள் பல. இலக்கியம், கருத்து என்பவற்றால் கவரப்பட்டும் கருத்துக்களை உள்வாங்கியும் நாமும் பல்வேறு வெளிப்பாடுகளைக் காட்டுகிறோம். அவ் வெளிப்பாடுகளில் ஒன்றுதான் எமது எழுத்துக்கள்.

ஆரம்பத்தில் எவ்வொருவரும் தம் மீது தாக்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திய ஒரு வரையோ பலரையோ பின்பற்றியே எழுத முற்படுகிறார்கள். இன்று பெரும் எழுத்தாளர்கள் என்ற பட்டியலில் உள்ள பெரும்பான்மையினருக்கு இக்கூற்றில் மறுப்பிருக்காது.

வாசகர்களாகிய நாமும் எம்மீது ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களினூடும் பல கருத்துக்களை உள்வாங்கியும் எமது அனுபவங்களையும் சேர்த்து எழுத முற்படுகிறோம், எழுதுகிறோம். இவற்றில் சில தரமானவைகளாகவும் சில தரங்கெட்டவைகளாகவும் போய் வருகிறது. மேலும் நாம் பல விடயங்களில் வாசகர்களாக இருந்து கொண்டே சில விடயங்களை எழுதுகிறோம். தரமான எழுத்தாக்கம் என்பது ஒரு ஆழமான வாசகனால் முடியும், என்பது எனது அபிப்பிராயம். ஆனால் எழுத முற்படும் சிலரோ எதையுமே வாசிப்பதுமில்லை. எதையும் அறிய முற்படுவதுமில்லை. மக்கள் அனுபவங்களையோ, தமது சொந்த அனுபவங்களையோ அக்கறை கொள்வதுமில்லை. உலகில் நடைபெறும் பல்வேறு மாற்றங்களை கவனத்தில் எடுப்பதும் இல்லை. ஆயினும் எழுத வேண்டும் என்று எண்ணுகிறார்கள். இது எப்படி சாத்தியமாகும்? அவர்களது எழுத்துக்களில் எதாவதை எதிர்பார்த்து விட முடியுமா? "பானையில் இருந்தால் தான் அகப்பையில் வரும்" என்பார்கள். பானைக்குள் எதாவதைப் போட வேண்டியவர்களே போடாமல் விட்டால் எப்படி?

எழுத்தாளர்கள் என்பது ஆழமான வாசகர்களே. பலர் கருத்துக்களை கடைச்சரக்காக்கி பணம் பண்ணும் நோக்கத்துடனும் வெறுமனே புகழ், பதவிகள், பட்டங்கள் என்பவற்றுக்காகவும் எழுதிக் குவிக்கிறார்கள். இவர்களிடத்தே பல்வேறு நச்சுக்கருத்துக்கள் பிறப்பெடுக்கின்றன. எல்லா விதமான சமூக முரண்பாடுகளை மூடி மறைத்தும் அவைகளுடன் சமரசம் செய்து கொண்டும் பல்வேறு தவறுகளை கண்டும் காணாமல் விட்டு மூடி மறைத்து அவற்றுக்கு சலாம் போட்டும் எழுதுகிறார்கள். இவர்கள், இவர்களது எழுத்துக்களை அதன் உள்ளே அடங்கிய கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியுமா? இவர்களது எழுத்துக்களால் ஏதும் சமூகப்பயன் உண்டா? இல்லை. இவர்கள்



நல்ல தேடல் கொண்ட வாசகர்களால் நிராகரிக்கப்படுவர். நிராகரிக்கப்படுகிறார்கள். ஆனால் இன்னோர் வகையினர் சமூகத்தின் பல்வேறு சீர்கேடுகளை ஆய்வு செய்து முரண்பாடுகள் அதன் சமூக விஞ்ஞானப்பார்வை தீர்வுக்கான வழிகள் என்பவற்றில் ஆழமான அறிவியல் தேடலில் ஈடுபட்டு சூழ்நிலையும் சார்ந்த சமூகத்தையும் புரிந்து கொண்டு பல்வேறு உலக அனுபவங்களின் வெளிப்பாடுகளின் ஊடாக கருத்துக்கள் முன்வைக்கிறார்கள். பல தீர்வுக்கான கருத்துக்களும் இம்மண்ணிடம் நிமிர்வதற்கான கருத்துக்களும் இலக்கியமாகிறது. இவர்களது வாசகர்களது இடையேயும் பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டு அவர்களும் படைப்பாளிகளாகிறார்கள்.

எந்தவொரு வாசகனும் எழுத்தாளனும், கருத்தாளனும் சமூகத்தின் தேவையை உணர்ந்தே இலக்கியங்கள் வெளிக்கொணர வேண்டும். நாம் அன்றாடம் எவ்வளவு விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறோம். முகம் கொடுத்தோம். எமது சமூகத்தில் புரையோடிக்கிடக்கின்ற அடக்குமுறைகள் கொடுமைகள் ஏராளம், ஏராளம். அவை எம்மீது சுமையாக இருக்க முடியாததை போல். இருப்பதை அனுபவிக்கிறோம். இக்கொடுமைகள் இல்லாது ஒழிப்பதற்கான சமூகப்பணிகளில் எம்மால் ஈடுபடமுடியாதா? சுமைகள் இறக்கி புதைத்து வருவதற்கான ஒரு கருமாதனமாய் மாற முடியாதா? அக்கிரமங்களுக்காக, எமக்காக எமது பேனைகளை அசைக்க முடியாதா?

ஆக்கிரமிப்புக் கொடுமைகளால் சின்னாபின்னப்பட்ட தேசங்கள் தேசிய வெறி இன வெறி இனப் பாகுபாடு என்பவற்றால் சிதைந்து கிடக்கும் தேசிய இனங்கள் முதலாளித்துவத்தால் கொள்ளைப்படுத்தப்படும் தொழிலாளர்கள் விவசாயிகள். சாதிக் கொடுமைகளினால் நசிந்து நொந்து போன மக்கள். சீதனம், பெண்ணடிமைத்தனம் போன்றவற்றால் வேதனை அனுபவிக்கும் பெண்கள் இவையும் இவை போன்ற எத்தனையோ கொடுமைகளும் அவற்றிற்கு எதிரான எத்தனையோ வீறுமிக்க போராட்டங்களும் எம் கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணக்கப் படவே இல்லையா? ஓரக்கண்களால் பார்த்துக் கொண்டு தூங்கிக் கொள்கிறோமே ஏன்? இவற்றை எல்லாம் கண்டும் காணாமல் இருந்து கொண்டு பாலியலில் பல்வேறு ஆராட்சிகள் கற்பில் சிறந்தவள் கண்ணகியா? சீதையா? என்றும் கற்பனையில் பாத்திரங்கள், வாழ்க்கை. இவற்றிற்கே ஆயிரக்கணக்கில் வெளியீடுகள். விழா முதுகு சொறிவுகளின் திட்டல். விமர்சனங்கள் என்ற பெயரில் இவைகளுக்கும் வெளியீடுகள். ஏன்? அன்றடம் நாம் பார்க்கும் நாலாம்தரத்து சினிமாப்படங்கள் அதுவும் ஐரோப்பிய சூழலில் கொச்சைகாதல் சினிமாவும், சினிமா போன்ற வாழ்க்கையும் எட்டாத சினிமா கற்பனைகளும் கருத்துக்களும் எழுத்துக்களும் இதுவே வாழ்க்கை. இதுவே எழுத்து என்று சீரழிந்து கொண்டிருக்கிறோம். பொய்யானதும் தற்காலியமானதுமான அகத்வாழ்க்கையின் மீது எம்மையும் ஏமாற்றி எமது எதிர்கால சந்ததிகளையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம். இவற்றையும் தாண்டிப்படைத்து இவையே எதிர்காலமென்று எழுதுகின்ற, எழுதமுனைகின்ற கூட்டமும் உண்டல்லவா? ஐரோப்பாவின் எத்தனையோ நல்ல அம்சங்களைத் தூக்கி எறிந்து விட்டோம். எமது தேசத்தையும் நாம் தூக்கி எறிந்து விட முடியுமா? அங்கு பறிக்கப்பட்ட எமது சுதேசத்தின் சுதந்திரத்தை இங்கு ஓரளவு ஆவது பயன்படுத்த முடியவில்லையா? பயன்படுத்துகிறோமா? சரியானவற்றிக்கும் தவறானவற்றிக்கும் என்று இரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கிறது அல்லவா?

இதுவரை சொன்ன கருத்துக்களிலிருந்து எமக்கு என்ன புரிகிறது. இரண்டுவகை வாசகர்களும் இரண்டுவகைத் தளங்களில் ஏற்படுகின்ற எழுத்துக்களும் இருந்து கொண்டு இருக்கிறது. இவை ஒன்றை ஒன்று முரண்படுகின்ற கருத்துக்கள். அவை இலக்கியம் அரசியல் சமூக விஞ்ஞானம் போன்ற சமூகத்தின் ஒவ்வொரு பரிமாணத்திலும் வெளிப்படுகின்றது. அது உண்மைக்கும் பொய்மைக்கும் தவறுகளுக்கும், சரியானவற்றிக்கும் இடையே ஏற்படுகிறது. இதனிடையேதான் நாம் உண்மைகளையும் சரியானவற்றையும் தேட வேண்டும். அவற்றின் தேவைகளுக்காக எமது தேடல்களின் கருத்துக்கள் வெளிக்கொணரவேண்டும் அதுவே நேர்மையான ஆரோக்கியமான கருத்துப்பரம்பலுக்கும் தரமான எழுத்துப் பரம்பைத் தொடர்வதற்கும் நாம் செய்யக்கூடிய பெரும்பணியாகும்.

-யாதவன்-



பழங்காலத்திலிருந்து இன்றுவரை, பெரும் பகுதி ஆண்கள் அடிமைத்தனத்திலேயே வளர்ந்து வந்திருக்கிறார்கள். ஆனால் பெண்களின் நிலைமையோ இது விஷயத்தில் இன்னும் மோசமாயிருக்கிறது. பெண்கள் சுதந்திரத்திற்குத் தகுதியற்றவர்கள் என்ற நம்பிக்கை வளர்க்கப்பட்டிருக்கிறது. ''பெண், குழந்தைப் பருவத்தில் தந்தையாலும் வாலிபப் பருவத்தில் கணவனாலும், முதுமைப் பருவத்தில் மகனாலும், காப்பாற்றப்பட வேண்டியவள். அவளுக்குச் சுதந்திர உரிமையில்லை'' என்ற பழங்கால சுலோகத்தின் மூலம் பெண்களுக்கு அடிமைச் சாசனம் பக்காவாகக் கிடைத்திருக்கிறது. ஐரோப்பாவின் கிறிஸ்தவப் பாதிரிகளும், சில நூற்றாண்டுகளுக்கு முன்வரை, ''பெண்களுக்கு ஆத்மா இல்லை'' என்று சொல்லி வந்தார்கள். இந்துக்களும் பெண்கள் கணவனின் பாதி அங்கம் என்று கருதுகிறார்கள். கணவன் இறக்கும்போது, அவனுடைய பாதி அங்கமான மனைவியும் இறந்து விடுகிறாள். இதை மெய்ப்பிப்பதற்காகச் சென்ற நூற்றாண்டுவரை இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான விதவைகள் கணவனின் பிணத்தோடு வைத்து எரிக்கப்பட்டார்கள். ஆனால் இந்தப் பாதி அங்க விதி, கணவனைப் பொறுத்தவரை ஒருநாளும் ஒப்புக்கொள்ளப்பட்டதில்லை. உண்மையில் எல்லா நாடுகளிலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வெவ்வேறு தனித்தனிச் சட்டங்களும், ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. இந்துக்கள் சந்தர்ப்பத்திலும், அசந்தர்ப்பத்திலும் தொண்டையைக் கிழித்துக் கொண்டு கூச்சலிட்ட பதிவிரதா தர்மம், வஞ்சனையின் எல்லைக்கு ஒரு பெரிய உதாரணம். ஆயிரக்கணக்கான வருடங்களாகப் பெண்களுக்கு விரோதமாக ஓரவஞ்சகமாக ஒரு பெரிய சூழல் தயாரிக்கப்பட்டு வந்தது. மதம், ஆசாரம், சமுதாயம் முதலிய விஷயங்களில் அவர்களுக்கு ஆண்களிலிருந்து நேர்மாறான, தனிவழிகள் செய்யப்பட்டன. சரியாக சிந்திக்க முடியாதபடியும், புத்தி மயக்கம் ஏற்படும் பொருட்டும், அவர்களுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே மிக அதிகமாக மத சம்பந்தமான கதைகளால் காதை நிரப்பி மூடநம்பிக்கையைத் தோற்றுவித்து வந்தார்கள். இன்றுவரை, அனேக நாடுகளில் அவர்கள் கல்வியினிடமிருந்தும் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். பழங்காலத்திலேயே ''கோஷா'' போன்ற சகிக்கமுடியாத பழக்கம் அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டது. மதமும் தனது நூல்களின் மூலம் அதைக் கடவுளின் விருப்பம் என்று சொல்லிப் பலப்படுத்தியது. எல்லாவற்றையும் விடப்பெரிதான பொருளாதார அடிமைத்தனம் என்ற அடிமைச் சங்கிலி அவர்கள் கால்களில் மாட்டப்பட்டிருக்கிறது.

-ராகுல்ஜி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யமன்

### - சேரன் -

காற்று வீசவும்
அஞ்சும் ஓர் இரவில்
நட்சத்திரங்களுக்கிடையே இருக்கிற
அமைதியின் அர்த்தம் என்ன
என்று
நான் நினைத்த ஓர் கணம்,

கதவருகே யாருடைய நிழல் அது

நான் அறியேன் ;
அவர்களும் அறியார்
உணர்வதன் முன்பு
அதுவும் நிகழ்ந்தது.

மரணம்.

காரணம் அற்றது,
நியாயம் அற்றது,
கோட்பாடுகளும் வியூகங்களும்
அவ்வவ்விடத்தே உறைந்து போக
முடிவிலா அமைதி.

மூடப்பட்ட கதவு முகப்பில்,
இருளில்,
திசை தெரியாது
மோதி மோதிச் செட்டையடிக்கிற
புறுக்களை,

தாங்கும் வலுவை என்
இதயம் இழந்தது.

இளைய வயதில்
உலகை வெறுத்தா
நிறங்களை உதிர்த்தன,
வண்ணத்துப் பூச்சிகள்
புழுதி படாது
பொன் இதழ் விரிந்த
சூரிய காந்தியாய்,
நீர் தொடச்
சூரிய இதழ்கள் விரியும்
தாமரைக் கதிராய்,
நட்சத்திரங்களாய்
மறுபடி அவைகள் பிறக்கும்.

அதுவரை,
பொய்கைக் கரையில்
அலைகளைப் பார்த்திரு !

கண் விழித்திருப்போம்
நண்பர்களே !

சோகம் படர்ந்த
தேசப் படமும்,
இதுவரைகாலம்
சிந்திய இரத்தமும்,
இதுவரைகால
இழப்பும்,
நெருப்பும்,
எரியும் மனமும்

இன்னொருவனுக்கு அடிமையாகவா ?

இரவல் படையில்
புரட்சி எதற்கு ?

எங்கள் நிலத்தில்
எங்கள் பலத்தில்
எங்கள் கால்களில்
தங்கி நில்லுங்கள்.

வெல்வோமாயின் வாழ்வோம்
வீழ்வோமாயினும் வாழ்வோம்
நமது பரம்பரை
போர் புரியட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org